சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண்.ஓ.எஸ்.ஐ.ஏ.369/2011 இன் ஓ.எஸ்.110/2011

2020ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW.4 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G.சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | கணேஉ்குமார் | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | | சமயம் |
| கிராமம் | | சாதி |
| தாலுகா | | வயது |

குறுக்கு விசாரணை (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

25.02.2020 - வழக்கறிஞர் ராமகிருஉ்ணன் எங்கள் மருத்துவமனை டிரஸ்டின் உறுப்பினர் என்றால் சரிதான். அவரின் ஏற்பாட்டின் பேரில் தான் அப்துல்லாவை மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துக்கொண்டோம் என்றால் சரிதான். பொதுவாக மனநலம் பாதிக்கப்பட்ட நபருக்கு சிகிச்சை கொடுப்பதற்கு முன்பாக அவர் உடன் வரும் நபரிடமோ அல்லது உறவினரிடமோ சிகிச்சை முறையை விளக்கியும் சிகிச்சையில் எதுவும் குறைபாடு ஏற்பட்டால் அதற்கு மருத்துவமனை நிர்வாகம் பொறுப்பேற்காது என்றும் டிக்லரேசன் பார்ம்மில் கையெழுத்து பெறுவீர்களா என்றால் ஆமாம். எ.ம.சா.ஆ.5 டிக்லரேசன் சான்றிதழில் உள்ள இடது பெருவிரல் கைரேகை அப்துல்லாவின் கைரேகை என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. மேற்சொன்ன டிக்லரேசன் சான்றிதழில் யாரிடமிருந்து சான்றொப்பம் பெறப்படுகிறது என்ற விபரப்பத்தியில் அப்துல்லாவின் பெயர் தான் காணப்படுகிறது என்றால் ஆமாம். அப்துல்லா எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு வருவதற்கு முன்பு அவர் எப்படி இருந்தார் என்பது பற்றி எங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அப்துல்லா என்ன படித்துள்ளார் என்ற விபரம் பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதுபற்றி நான் விசாரிக்கவும் இல்லை என்றால் சரிதான். அப்துல்லா என்பவர் திருநெல்வேலியில் இயங்கி வரும் அய்யப்பா டிரஸ்ட் மருத்துவமனையான பாலசரண்யா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால்

சரிதான். அது சம்பந்தமான எந்த ஆவணத்தையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பாலசரண்யா மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடிந்து வெளியில் வரும்போது நோய் குணமாகி வந்தாரா இல்லையா என்ற விபரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அப்துல்லா 2007 முதல் 2018ம் ஆண்டு வரை பாலசரண்யா மருத்துவமனை காப்பகத்தில் தங்கியிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்துல்லா வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 2011ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் என்ன மனநிலையில் இருந்தார் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. 2011ம் ஆண்டு மனநல காப்பக மருத்துவர் அளித்த அறிக்கை தான் சரியாக ஒன்றாக இருக்கமுடியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்துல்லாவை என்னென்ன பரிசோதனை செய்தேன், என்னென்ன கேள்விகள் கேட்டு அவர் என்ன பதில் கூறினார் என்பதை வைத்து அவர் மனநிலை சரியில்லாதவர் என்று முடிவு செய்த விபரம் என்னுடைய அறிக்கையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அப்துல்லா தற்போதும் நல்ல மனநிலையில் தான் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல, கடந்த 1 1/2 வருடமாக நான் அப்துல்லாவிற்கு சிகிச்சை அளித்து வருகிறேன், அதன்படி அவர் நல்ல மனநிலையில் இல்லை. ஏற்கனவே தாக்கல் செய்துள்ள சாட்சி சான்றாவனம்.5 துலங்குமா என்றால் துலங்காது. நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.